# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 352/மா/2023**
**நாள் : 29.11.2023**

திரு. B. இரமேஷ்,
சென்னை – 28. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–14, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், புதிய கூடுதல் சட்ட அறை, எண்.222 என்ற அலுவலக முகவரியில் இருந்து திரு. B. இரமேஷ் என்பவரின் 31.10.2023 நாளிட்ட மனு 02.11.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 352/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், புதிய கூடுதல் சட்ட அறை, எண்.222 என்ற அலுவலக முகவரியில் இருந்து திரு. B. இரமேஷ் என்பவரிடமிருந்து பெறப்பட்ட 31.10.2023 நாளிட்ட மனுவில்:

என்னுடைய சகோதரி சென்னை மடிப்பாக்கம் கிருஷ்ணாநகர் விரிவு பகுதியில் தன்னுடைய குடும்பத்துடன் வசித்து வருகிறார். என்னுடைய சகோதரியை பார்ப்பதற்காக நான் அடிக்கடி இரு சக்கர வாகனத்தில் அவருடைய வீட்டிற்கு சென்று வருவது வழக்கம். என்னுடைய சகோதரி வசிக்கும் பகுதி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 மற்றும் வார்டு 188க்கு உட்பட்ட பகுதியாகும். என்னுடைய சகோதரி வசிக்கும் பகுதியில் உள்ள கிருஷ்ணாநகர் விரிவு சாலை கடந்த பிப்ரவரி 2023 மாதம் முதல் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிக்காக சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பள்ளம் எடுக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு சேதப்படுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளை வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பு சீரமைத்து புதிய சாலை போடப்பட வேண்டுமென தமிழக அரசு சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட்டிருந்தது. அதனடிப்படையில் என் சகோதரி வசிக்கும் பகுதியை தவிர்த்து சுற்றியுள்ள அனைத்து பகுதிகளிலும் சேதமடைந்த சாலைகளுக்கு பதிலாக புதிய தார் சாலையை சென்னை மாநகராட்சி அமைத்து கொடுத்துவிட்டது. இதுபற்றி சென்னை மாநகராட்சி இணையதளம் வழியாக இரண்டு புகார்களை நான் பதிவு செய்திருந்தேன். புகார் எண்கள்.2023-174 PJI மற்றும்

2023-284DHN ஆகும். என்னுடைய புகார்களுக்கு சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன், வார்டு 188, உதவிப் பொறியாளர் அவர்கள் பருவமழைக்கு முன்னதாக சாலை சீரமைக்கப்படும் என எனக்கு பதில் தெரிவித்திருந்தார். ஆனால் மேற்படி வார்டு 188 உதவிப் பொறியாளர் உறுதியளித்தபடி பருவமழைக்கு முன்னதாக என் சகோதரி வசிக்கும் மேற்படி பகுதியில் இதுவரை சேதமடைந்த கிருஷ்ணாநகர் விரிவு சாலையை சீரமைத்து புதிய சாலை அமைக்கவில்லை. மேலும், மேற்படி வார்டு 188 உதவிப் பொறியாளர் அவர்களை அவரது அலைபேசிக்கு நான் பலமுறை தொடர்பு கொண்டும் அவர் செல்போனை எடுத்து எனக்கு பதிலளிக்கவில்லை. பொது மக்களுக்கு சட்டப்படி செய்ய வேண்டிய கடமையை செய்யாமல் மேற்படி வார்டு 188 உதவிப் பொறியாளர் கடமை தவறியுள்ளார். இவரின் கடமை தவறுதலுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர் 14 அவர்களும் கூட்டு பொறுப்பாவார்கள். என் சகோதரி வசிக்கும் மேற்படி பகுதியில் இன்றுவரை சேதமடைந்த சாலையை சென்னை மாநகராட்சி சீரமைக்காத காரணத்தால் சிறு மழைக்கே சாலை குண்டும் குழியுமாக சேறாகி பொது மக்கள் சாலையில் நடந்து சென்றால் வழுக்கி விழுந்து உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மழைக்காலங்களில் பொது மக்கள் வீட்டைவிட்டு வெளியே வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மோசமான சாலை காரணமாக அவசரத்திற்கு மருத்துவ உதவி மற்றும் ஆம்புலன்ஸ் சேவைகளை பெறமுடியாத நிலைக்கு என் சகோதரி வசிக்கும் பகுதியிலுள்ள பொது மக்கள் பெரும் துயரத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே, தாங்கள் தயவு செய்து சட்டப்படி செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல் எனக்கும், பொதுமக்களுக்கும் இன்னல் ஏற்படுத்திய பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்-14 மற்றும் அவரின் கீழ் பணிபுரியும் வார்டு 188 உதவிப் பொறியாளர் ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், என் சகோதரி வசிக்கும் பகுதியிலுள்ள சேதமடைந்த சாலையை உடனடியாக சீரமைக்க தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு தங்களை நான் பொது நலன் கருதி வேண்டுகிறேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 16.11.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 14, மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. மண்டல அலுவலர் தனது 20.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

கிருஷ்ணா நகர் விரிவு பகுதியில் கடந்த பிப்ரவரி 2023 மாதம் முதல் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிக்காக சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பள்ளம் எடுக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளதை சீரமைக்கும் பொருள்குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிப்பது யாதெனில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14, பகுதி-42, கோட்டம் -188 மடிப்பாக்கம் பகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணாநகர் விரிவு பிரதான சாலை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் 2011-ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. இப்பகுதியில் சென்னை குடிநீர் வழங்கும் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் பாதாள சாக்கடை திட்ட பணிக்காக கழிவுநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது முழுமையாக முடிவு பெறவில்லை. இவ்வாறு கழிவுநீர் குழாய் பதிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சாலை வெட்டு பகுதியில் (Road cut portion) பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக சாலைவெட்டு சீரமைக்கும் பணியானது மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது கான்கிரீட் கலவைக் கொண்டு சாலையை சமன் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கிருஷ்ணாநகர் விரிவு பிரதான சாலைக்கு புதிய தார்சாலை அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் M/s. குருமூர்த்தி எண்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு ரூ.29.58 லட்சத்தில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலமாக கழிவுநீர் குழாய் பதிக்கும் பணி முழுமையாக நிறைவுபெற்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு (Hand Over) செய்தவுடன் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் புதிய தார்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 22.11.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 16.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 22.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

நான் கடந்த 31.10.2023 தேதியில் மாண்பமை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்துக்கு அனுப்பிய முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சங்கதிகளையே என்னுடைய பிரமாண வாக்குமூலமாக பாவித்து ஏற்றுக்கொள்ள நான் பிரார்த்திக்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14—ன் இளநிலைப் பொறியாளர் 22.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

"மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14, கோட்டம் -188 மடிப்பாக்கம் கிருஷ்ணா நகர் விரிவு பகுதியில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை. மேற்கண்ட இடத்தில் புதிய தார் சாலை அமைத்திட பெருநகர சென்னை மாநகராட்சியால் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட குழாய் பதிக்கும் பணி முழுமைபெற்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைவு செய்யப்பட்டவுடன் புதிய தார் சாலை அமைக்கும் பணி செய்து முடிக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேற்கண்ட பாதாள சாக்கடை மற்றும் குழாய் பதிக்கும் பணிகளை துரிதமாக முடித்திடுமாறு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு நேரிலும், கடிதம் மூலமும் ஓரிரு நாட்களில் வேண்டுகோள் வைக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரரின் சகோதரி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 வார்டு 188, மடிப்பாக்கம், கிருஷ்ணாநகர் விரிவு சாலையில் வசிப்பதாகவும் அச்சாலை கடந்த பிப்ரவரி 2023 மாதம் முதல் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்காக சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் பள்ளம் எடுக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டதாகவும், அதனை சீரமைக்க வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்திலும், மண்டலம்-14ன் அலுவலகத்திலும் புகார் அளித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், சேதமடைந்த சாலையை உடனடியாக சீரமைக்க தகுந்த உத்தரவினை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14, பகுதி–42, கோட்டம்-188 மடிப்பாக்கம் பகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணா நகர் விரிவு பிரதான சாலை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் 2011ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது என்றும், இப்பகுதியில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் பாதாள சாக்கடை திட்ட பணிக்காக கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும், இப்பணி இன்னும் முழுமை அடையவில்லை என்றும், குழாய் பதிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சாலை வெட்டு பகுதியில் (Road cut portion) சாலைவெட்டு சீரமைக்கும் பணியானது மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது கான்கிரீட் கலவைக் கொண்டு சாலை சமன் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட சாலைக்கு புதிய தார் சாலை அமைக்க ரூ.29.58 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும், சென்னை குடிநீர் வழங்கும் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் கழிவு நீர் குழாய் பதிக்கும் பணி முழுமையாக நிறைவுபெற்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்தவுடன் புதிய தார்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் மண்டல அலுவலர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கண்ட பாதாள சாக்கடை மற்றும் குழாய் பதிக்கும் பணிகளை துரிதமாக முடித்திடுமாறு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு நேரிலும், கடிதம் மூலமும் ஓரிரு நாட்களில் வேண்டுகோள் வைக்கப்படும் என்று பெருநகர சென்னை மநாகராட்சி மண்டலம்–14ன் இளநிலைப்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ற்கு கிருஷ்ணாநகர் விரிவு சாலையில் பாதாள சாக்கடை திட்ட பணிக்காக கழிவு நீர் குழாய் பதிக்கும் பணிக்காக பள்ளம் எடுக்கப்பட்டு சாலை சேதடைந்து உள்ளதை சீரமைக்க கோரி மனு அளித்தவுடன் சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் அலுவலர்கள் இன்னும் விரைவாக செயல்பட்டு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தை கழிவுநீர் குழாய் பதிக்கும் பணியினை விரைவில் நிறைவு செய்யுமாறு நேரிலோ அல்லது கடிதம் வாயிலாகவோ சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தை அணுகியிருக்கலாம் என இம்முறைமன்றம் கருதுகிறது. இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் இளநிலைப்பொறியாளர் தெரிவித்தவாறு சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தை அணுகி அப்பகுதி மக்களின் குறைபோக்கும் வகையில் மேற்கண்ட கிருஷ்ணா நகர் பிரதான சாலையில் நடைபெறும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணியினை விரைந்து முடித்திட கேட்டுக்கொள்ளுமாறு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி பெருநகர சென்னை மாநகராட்சி உதவி ஆணையருக்கு

ஆணையிடுகிறது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சாலைகளில் கழிவுநீர் பதிக்கும் பணியினை சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் செயல்படுத்தும்போது பெருநகர சென்னை மாநகராட்சி அவ்வாரியத்துடன் இணைந்து பருவமழை காலத்திற்கு முன் போர்க்கால அடிப்படையில் அத்தகைய பணியினை நிறைவு செய்யும் வகையில் திட்டமிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆலோசனை வழங்கி ஆணையிடுகிறது. மேற்கண்ட சாலையை சீரமைக்கும்பணி தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அறிக்கை அளிக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. இரமேஷ்,
வழக்குரைஞர்,
222, புதிய கூடுதல் சட்ட அறை,
உயர்நீதிமன்ற வளாகம், சென்னை - 600 104.
2. கூடுதல் தலைமைச் செயலர் (ம) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை – 600 091.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்